# உங்கள் பணித் தராதர உரிமைகள்:
# தற்காலிக உதவி முகவர்நிலைய ஒப்படைவுப் பணியாளர்கள்

தகவல் இதழ்

## ஒரு தற்காலிக உதவி முகவர்நிலையத்தின் ஒப்படைவுப் பணியாளர்கள்

ஒரு தற்காலிக உதவி முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் (அல்லது சேவைபெறுநர்கள்) இடத்தில், தற்காலிக வேலை ஒப்படைவுகளுக்காக அம்முகவர்நிலையம் உங்களை அமர்த்தும் அல்லது அமர்த்த முயற்சி செய்யும் என்று, நீங்களும் அந்த முகவர் நிலையமும் இணங்கியிருந்தால், நீங்கள் அத்தற்காலிக உதவி முகவர்நிலையத்தின் ஒப்படைவு வேலைப் பணியாளர் ஆவீர்கள். உங்களுக்கு ஓர் ஒப்படைவு வேலை தரப்படாத நிலையில் ஒரு சேவை பெறுநரின் இடத்தில் நீங்கள் வேலை செய்யாத நேரத்திலும் அம்முகவர்நிலையத்துடன் உங்களுக்கு பணி சம்பந்தமான உறவு ஒன்று இருக்கிறது.

நீங்கள் ஒப்படைவு வேலையில் ஈடுபட்டு இருக்கும் பொழுது முகவர்நிலையமே தொடர்ந்து உங்களுக்கான வேலையளிப்பவராக இருக்கும், சேவைபெறுநர் உங்களுக்கான வேலையளிப்பவராக இருக்கமாட்டார்.

நீங்கள் முகவர்நிலையத்தில் இருந்து விலகினால் அல்லது முகவர்நிலையம் உங்கள் பணி சம்பந்தமான உறவினை முடித்துக் கொண்டால் நீங்கள் ஒப்படைவு வேலைப் பணியாளராக இருப்பது நின்றுவிடும்.

இத்தகவல் இதழ் 2009 ஆம் ஆண்டில் சட்டமாக மாறியுள்ள உங்கள் புதிய *பணித் தராதரச் சட்டம், 2000* (ஈஎஸ்ஏ) தொடர்பிலான உரிமைகளின் சுருக்கம் ஒன்றினைத் தருகிறது. குறைந்த பட்ச ஊதியம், வேலை செய்யும் மணித்தியாலங்களுக்கான வரையறை, மேலதிக நேர வேலைக்கான ஊதியம், பணி விடுமுறைகள், ஊதியம் வழங்கப்படாதனவாய் குறித்த சில காரணங்களுக்காக வேலையில் இருந்து பெறும் விடுப்புகள் போன்ற விடயங்களிலும் ஈஎஸ்ஏ ஏற்பாட்டின் கீழ் உங்களுக்கு உரிமைகள் உண்டு. (எந்த வகையான வேலையை நீங்கள் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்து சில விதிவிலக்குகளும் இவற்றுக்கு இருக்கலாம்.)

## பொது விடுமுறை நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாள் ஊதியம் என்பவற்றுக்கான உரிமை

ஒன்ராறியோவில் ஒன்பது பொது விடுமுறை நாட்கள் உண்டு. பொதுவாக, நீங்கள் ஒப்படைவு வேலை ஒன்றைச் செய்யும் பொழுது நீங்கள் சாதாரணமாக வேலை செய்ய வேண்டிய ஒரு நாளில் பொது விடுமுறை நாள் வருமானால், அந்தப் பொது விடுமுறை நாளில் வேலையில் இருந்து விடுப்பு எடுப்பதற்கும் அத்துடன் அந்த நாளுக்கான பொது விடுமுறை நாள் ஊதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் உங்களுக்கு உரிமை இருக்கிறது. உங்கள் விடுமுறை நாள் வேலை ஊதியத்தைக் கணித்துக் கொள்வதற்குத் தயவு செய்து பின்வரும் எமது இணையத்தளத்தில் உள்ள கணிப்புக் கருவியினைப் பயன்படுத்துங்கள்:
**http://www.labour.gov.on.ca/english/es/tools/php_calc.php**.

குறிப்பிட்ட விடுமுறை நாளில் வேலை செய்வதற்கு எழுத்து மூலமாக நீங்கள் இணங்கி இருந்தால், உங்களுக்கு பின்வருவனவற்றைப் பெறும் உரிமையும் உண்டு:

- பொது விடுமுறை நாள் வேலை ஊதியம் அத்துடன் வெகுமதி ஊதியம் (குறைந்த பட்சம் உங்களுடைய வழக்கமான சம்பள வீதத்தின் ஒன்றரை மடங்கு அளவு); அல்லது
- உங்கள் வழக்கமான சம்பள வீதம் அத்துடன் பொது விடுமுறை நாள் ஊதியத்துடன் கூடியதாய் வேலை செய்யாத ஒரு மாற்றீட்டு நாள்.

நீங்கள் ஒப்படைவு வேலையில் ஈடுபட்டுள்ள பொழுது ஒரு நாளன்று ஒரு பொது விடுமுறை நாள் வருகிறது என்றால், அந்த நாளில் சாதாரணமாக நீங்கள் வேலை செய்ய மாட்டீர்கள் என்றால் (அல்லது பணி விடுமுறையில் இருந்தால்), பொது விடுமுறை நாள் ஊதியத்துடன் கூடியதாய் வேலை செய்யாத ஒரு மாற்றீட்டு நாளினைப் பெறும் உரிமை உங்களுக்கு உண்டு. அல்லது பொது விடுமுறை நாள் ஊதியத்தை மட்டும் பெறுவதற்கு நீங்கள் (எழுத்து மூலம்) இணங்கலாம். நீங்கள் ஒப்படைவு வேலையில் ஈடுபடாத ஒரு நாளில் ஒரு பொது விடுமுறை நாள் வருமானால் பொது விடுமுறை நாள் ஊதியத்தைப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்கலாம்.

முகவர்நிலையம் உங்களை “வேலை செய்ய முன்வந்த” ஒரு பணியாளர் என்று அழைத்தாலும் இவ்வாறான பொது விடுமுறை நாள் உரிமைகள் உங்களுக்கு உண்டு.

## வேலை நீக்கத்துக்கான அறிவித்தல் மற்றும் தொடர்புத்துண்டிப்பு ஊதியம்

ஒரு தற்காலிக உதவி முகவர்நிலையத்தினால் நீங்கள் குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தால், பின்னர் உங்கள் பணி சம்பந்தமான உறவினை முகவர் நிலையம் நிறுத்தினால் (வேலை நீக்கம் செய்தால்) வேலை நீக்கத்துக்கான அறிவித்தலைப் பெறும் உரிமை பொதுவாக உங்களுக்கு உண்டு. வேலை செய்யும் பொழுது தரப்படும் அறிவித்தல் அல்லது வேலை செய்வதற்குப் பதிலாகச் சம்பளம் அல்லது இரண்டும் சேர்த்து உங்களுக்கு வழங்கப்படலாம். பொதுவாக உங்களுக்குக் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டிய குறைந்த பட்ச அறிவித்தல் காலம் என்பது (உங்கள் வேலை குறைந்த பட்சம் மூன்று மாதங்கள், ஆனாலும் ஒரு வருடத்துக்கு உட்பட்டதாகத் தரப்பட்டு இருந்தால்) ஒரு கிழமை என்று ஆரம்பித்து (எட்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடுதலாக வேலை தரப்பட்டு இருந்தால்) எட்டு கிழமைகள் வரையில் அமையும். முகவர்நிலையத்தினால் நீங்கள் எவ்வளவு காலம் வேலைக்கு அமர்த்தப்பட்டீர்கள் என்பதைப் பொறுத்து உங்களுக்குத் தரப்படவேண்டிய அறிவித்தல் எத்தனை கிழமைகள் என்பது தங்கி இருக்கும். இது முகவர்நிலையத்தின் சேவை பெறுநர்களிடம் நீங்கள் ஒப்படைவு வேலைகளின் நிமித்தம் வேலை செய்த காலத்தின் அளவில் தங்கியிருக்க மாட்டாது.

பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களை ஒன்றாக வேலை நீக்கம் செய்யும் வேளையில் முன்னறிவித்தல் பெறும் உரிமையும் உங்களுக்கு இருக்கலாம். பெரும் எண்ணிக்கையில் முன்னறிவித்தல் பெறுவதற்கான உங்கள் தகைமை பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு பின்வரும் எமது இணையத்தளம் சென்று பாருங்கள்:
**http://www.labour.gov.on.ca/english/es/pubs/guide/tempagencies.php.**

ஒரு முகவர் நிலையத்தின் பணியாளராக நீங்கள் ஐந்து வருடங்கள் அல்லது அதனிலும் கூடுதலாக தொடர்ந்து இருந்து வந்தபின் அந்த முகவர் நிலையம் உங்கள் பணித் தொடர்பினை முடித்துக் கொள்ளும் (வேலைநீக்கம் செய்யும்) என்றால் தொடர்புத்துண்டிப்பு ஊதியம் பெறும் உரிமையும் உங்களுக்கு இருக்கலாம்.

முகவர் நிலையம் உங்களை “வேலை செய்ய முன்வந்த” ஒரு பணியாளர் என்று அழைத்தாலும் இவ்வுரிமைகள் உங்களுக்கு இருக்கும்.

## ஒரு முகவர்நிலையம் உங்களிடம் குறிப்பிட்ட சில கட்டணங்கள் அறவிட முடியாது

ஒரு முகவர்நிலையத்தின் பணியாளராக வைத்து இருப்பதற்கோ, அல்லது நீங்கள் வேலை தேடுவதற்கு அவர்கள் உதவுவதற்கோ முகவர்நிலையம் உங்களிடம் கட்டணம் எதனையும் அறவிட முடியாது. சுயவிபரக் கூற்று ஒன்றினை வரைவது அல்லது நேர்முகச் சோதனைக்குத் தயாரிப்பது எப்படி போன்றவை பற்றிய தகவல் அல்லது புத்திமதியை உங்களுக்குத் தருவதற்கு முகவர் நிலையம் உங்களிடம் கட்டணம் அறவிட முடியாது. இத்தகவல் அல்லது புத்திமதியை சம்பந்தப்பட்ட முகவர் நிலையத்திடம் பெறுவது அல்லது விடுவது பற்றி நீங்களே முடிவு செய்யும் நிலையில் இருந்தாலும் முகவர் நிலையம் கட்டணம் அறவிட முடியாது.

## ஒரு முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் ஒருவர் உங்களுக்கு வேலை பெறுதற்கான உசாவல் சான்று தரவிரும்பினால்

முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் ஒருவர் நீங்கள் வேலை பெறுதற்கான உசாவல் சான்று ஒன்றினை உங்களுக்குத் தருவதை முகவர் நிலையம் தடுக்க முடியாது.

## முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் ஒருவர் உங்களைத் தமது பணியாளராக அமர்த்த விரும்பினால்

முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் ஒருவர் விரும்பினால் உங்களை நேரடியாகத் தம்மிடம் வேலைக்கு அமர்த்துவதை முகவர்நிலையம் தடுக்க முடியாது. முகவர்நிலையம் சேவைபெறுநர் ஒருவரிடம் ஓர் ஒப்படைவு வேலைக்காக உங்களை அமர்த்தி இருந்தால், சேவைபெறுநர் நேரடியாக உங்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்ளும் காரணத்துக்காக சேவை பெறுநரிடம் இருந்து கட்டணம் ஒன்றை அறவிட முடியும். ஆனால் சேவைபெறுநருக்கு நீங்கள் முதலில் வேலை செய்ய ஆரம்பித்த நாளில் இருந்து பின்தொடரும் ஆறுமாத காலத்தில் மட்டுமே இது சாத்தியமாகும்.

முகவர்நிலையத்தின் வேலைபெறுநர் ஒருவர் தமது பணியாளராக இருக்கும்படி உங்களை வேலைக்கு அமர்த்த விரும்பினால், நீங்கள் அந்த வேலையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று உங்களுக்கு முகவர் நிலையம் சொல்ல முடியாது. வேலைபெறுநர் ஒருவர் உங்களை வேலைக்கு அமர்த்த விரும்பினால் முகவர்நிலையம் உங்களிடம் கட்டணம் எதனையும் அறவிட முடியாது.

## முகவர்நிலையத்திடம் இருந்து நீங்கள் பெற வேண்டிய தகவல்

ஒரு முகவர்நிலையத்தின் ஓர் ஒப்படைவு பணியாளராக நீங்கள் மாறினால், அம் முகவர்நிலையம் குறிப்பிட்ட சில தகவல்கள் உங்களுக்கு கொடுக்க வேண்டும். கொடுக்க வேண்டியவற்றுள் இந்தத் தகவல் இதழ், எழுத்து வடிவில் முகவர் நிலையத்தின் சட்டபூர்வமான பெயர் மற்றும் தொடர்பு கொள்ளுதற்கான தகவல் ஆகியன அடங்கும். நீங்கள் ஒப்படைவுப் பணியாளராக மாறிய பின்பு, முடிந்த அளவு விரைவாக இத்தகவலினை உங்களுக்கு முகவர்நிலையம் எழுத்து வடிவில் வழங்க வேண்டும்.

முகவர்நிலையம் உங்களுக்குத் தமது சேவை பெறுநர்களில் ஒருவரிடம் ஒப்படைவுப் பணி வழங்கும் பொழுது, முகவர் நிலையம் குறிப்பிட்ட சில தகவல்கள் உங்களுக்குக் கொடுக்க வேண்டும். சேவைபெறுநரின் சட்டரீதியான பெயர் மற்றும் தொடர்புத் தகவல்; ஊதிய வீதம் மற்றும் நலன்கள் (இருந்தால்); வேலை செய்யும் மணித்தியாலங்கள்; வேலை தொடர்பான ஒரு பொது விபரம் ; ஒப்படைவு வேலையின் மதிப்பீட்டுத் காலம் (தெரியுமாயின்) ; ஊதியம் வழங்கும் காலப்பகுதி மற்றும் ஊதியம் வழங்கும் தினம் ஆகியன அத்தகவலில் அடங்கி இருத்தல் வேண்டும். முகவர் நிலையம் இத்தகவலினைத் தந்த போதிலும், வேலையை முன்வைக்கும் பொழுது அதனை எழுத்து வடிவில் தரவில்லை என்றால், கூடிய சீக்கிரம் எழுத்து வடிவில் இத்தகவல் வழங்கப்படல் வேண்டும்.

## உங்கள் ஈஎஸ்ஏ உரிமைகள் பற்றி நீங்கள் விசாரித்தமைக்காக அல்லது அவற்றை நிலைநிறுத்த முற்பட்டதற்காக முகவர்நிலையத்தின் சேவைபெறுநர் ஒருவர் உங்களைத் தண்டிக்க முடியாது

உங்களுடைய பணித் தராதர உரிமைகள் பற்றி நீங்கள் விசாரித்தால் அல்லது உங்கள் உரிமைகளை வழங்கும்படி கேட்டால், சேவைபெறுநர் உங்கள் ஒப்படைவினை நிறுத்துவது உட்பட எந்த விதத்திலும் உங்களைத் தண்டிக்க முடியாது. (உங்கள் ஈஎஸ்ஏ உரிமைகள் பற்றி நீங்கள் விசாரித்தமைக்காக அல்லது அவற்றை நிலைநிறுத்த முற்பட்டதற்காக உங்கள் முகவர்நிலையமும் உங்களைத் தண்டிக்க முடியாத விதமாக இந்த உரிமை உங்களுக்குத் தொடர்ந்து இருக்கும்.)

## உங்களிடம் கேள்வி இருந்தால் அல்லது கோரிக்கை எதுவும் செய்ய விரும்பினால்

இங்குள்ள தகவல் பற்றி ஏதாவது கேள்விகள் உங்களிடம் இருந்தால், அல்லது உங்கள் உரிமைகள் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்று நம்புவதுடன் அதுபற்றித் தொழில் அமைச்சிடம் கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்க விரும்பினால் தயவு செய்து பணித் தராதரத் தகவல் நிலையத்துடன் (Employment Standards Information Centre) அதன் (416) 326-7160 என்ற தொலைபேசி இலக்கத்தில் (கட்டணமின்றி 1-800-531-5551) தொடர்பு கொள்ளுங்கள். செவிப்புலன் குறைந்தோருக்கான இலக்கம் 1-866-567-8893 ஆகும். மேலதிக தகவல் பெறுவதற்கும், அமைச்சுடன் மின்னஞ்சல் வழியாகத் தொடர்பு கொள்வதற்கும், கணினி வழியாகக் கோரிக்கை ஒன்றினைக் கோப்பில் பதிவதற்கும் நீங்கள் www.labour.gov.on.ca என்ற இணையத்தளத்துக்குச் செல்ல முடியும். சேவை ஒன்ராறியோ நிலையத்திலும் பணித் தராதரக் கோரிக்கைப் படிவம் ஒன்றினை நீங்கள் பெற முடியும். உங்களுக்கு மிகக் கிட்டிய சேவை ஒன்ராறியோ நிலையத்தினைத் தேடியறிவதற்குத் தயவுசெய்து அழையுங்கள் 1–800–267-8097.

**பொதுமக்களின் சேவைக்காக இத்தகவல் வழங்கப்படுகிறது. இந்தத் தகவல் முடிந்த அளவு இன்றைய காலத்துக்குப் பொருத்தமாகவும் திருத்தமாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நாங்கள் பெரு முயற்சி எடுத்தபோதிலும், சிலசமயங்களில் பிழைகள் புகுந்து விடுகின்றன. எனவே தகவலின் திருத்தமான நிலைபற்றி உத்தரவாதம் வழங்க முடியாது நாம் இருக்கிறோம். வாசகர்கள், முடியும் பொழுதெல்லாம், இத்தகவலினை உறுதிப்படுத்திய பின் உபயோகிக்க வேண்டும்.**

©Queen’s Printer for Ontario, 2009
ISBN 978-1-4435-1003-5 (PDF)
Printed in Canada